2018 ஜூன் 5]

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக ஆறு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் அங்கே R.O. Plant அமைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கே மூன்று இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு மிதிவண்டி நிறுத்தம் கட்டப்பட்டிருக்கிறது. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிலே, அந்தக் கல்லூரிக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே சுற்றுச் சுவர் கட்டுவதற்காக மற்றும் அடிப்படை வசதிகளுக்கு எவ்வளவு நிதி தேவை என்பது கணக்கிடப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அதற்குண்டான நிதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேவேளையில் அங்கே இப்போது ஆசிரியரல்லாத பணியிடங்கள் 9 வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே 7 இடங்களில் பணியாளர்கள் பணிசெய்து கொண்டிருக்கிறார்கள். 2 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த 2 இடங்களையும் பூர்த்தி செய்வதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***16602—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் கால்நடை மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அரங்கம் அமைக்கவும் மற்றும் மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 5

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவிலில் உள்ள கால்நடை மருந்தகத்தில் அறுவைச் சிகிச்சை அரங்கம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் இல்லாததால், திட்டம் இடம்பெறும்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இம்மருந்தகத்தையும் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூ மணக்கும் சோலையிலே பூத்துவந்த தனி மலராய், நாடும் ஏடும் போற்றுகின்ற நல்லாட்சி நடத்தி, உங்களையும் என்னையும் வாழவைத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளை வணங்குகிறேன். போற்றுவோர் போற்றட்டும். புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும், என் கடன் பணி செய்து கிடப்பதே என தமிழ்நாட்டு மக்களின் நன்மை ஒன்றையே தன்னுடைய நன்மையாகக் கருதி, நாளும் நற்பணியாற்றிவருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோவில் பேரூராட்சியிலே அமையப்பெற்றிருக்கின்ற கால்நடை மருத்துவமனை, ஒரு பேரூராட்சியையும், 11 ஊராட்சிகளையும் உள்ளடக்கியிருக்கக்கூடிய ஒரு மருத்துவமனை. எனவே, இந்த மருத்துவமனையை எதிர்காலத்தில் தரம் உயர்த்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அறுவை சிகிச்சை அரங்கம் அமைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கின்ற மாண்புமிகு

2018 ஜூன் 5]

அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். எதிர்காலத்தில் அப்பகுதி மக்களுடைய நலன் கருதி அதனை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில் தொகுதியில் இருக்கக்கூடிய பாளையங்கோட்டை ஊராட்சியிலே, கால்நடை கிளை நிலையம் இருக்கிறது. அரசின் தேவைகள் அத்தனையும் பூர்த்தியாகின்ற நிலையும் இருக்கிறது. எனவே, அந்தக் கிளை நிலையத்தை, அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி, கால்நடை கிளை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்துவதற்கு பரிசீலனை செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவைப்படுமாயின் அதிகாரிகளை அங்கு அனுப்பிவைத்து, உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*